

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் ஏ.வ.வேலு,வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா முன்னிலையில் நடைபெற்றது.உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சங்கர், மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர்,சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்) சதன் திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்) தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### தென்காசி மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில்

# தென்காசி - நெல்லை - தூத்துக்குடி மாவட்ட நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு - கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில்!

தென்காசி, டிச.17 -

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (15.12.2024) பொதுப் பணித்துறை அமைச்சர் (பொதுப்பணிகள், கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை) எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா முன்னிலையில் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில்பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:-

தென்காசி மாவட்டத்தில் நெடுஞ்சாலைகளில், சாலைகள், தரைப் பாலங்கள், மேம்பாலங்கள் உள்ளிட்டவைகளின் சேதாரங்கள் குறித்தும், மழையினால் பாதிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை களை உடனடியாக சரிசெய்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் எந்தவித இடையூறும் இல்லாமல் உடனடியாக சரி செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டு ள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் நெடுஞ்சாலைத் துறை மூலம் நடைபெற்று வரும் சாலைப்பணிகள் குறித்தும், உயர்மட்டப் பாலங்கள், தரைப்பாலங்கள் மற்றும் மேம்பாலங்களில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தரவிடப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் 2021-22ஆம் ஆண்டு கொல்லம் திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்று வரும் சாலைப்பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

உலக வங்கிக் கடன் உதவி மற்றும் மாநில அரசு நிதி மூலம் திருநெல்வேலி -செங்கோட்டை - கொல்லம் சாலையில் 47 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.322 கோடி மதிப்பீட்டில் இருவழித்தடத்தில் இருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் குறித்தும், புளியங்குடி முதல் கழுகுமலை வரை 34 கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் நடந்து வருவதையும், 2022 -23ஆம் ஆண்டு நிதி ஆண்டில் தேசிய நெடுஞ்சாலை கொல்லம் திருமங்கலம் சாலையில் இலஞ்சி குத்துக் கல்வலசை இடையே ரூ.53 கோடி மதிப்பீட்டில் ரயில்வே மேம்பால பணி முழுவீச்சில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் ஏ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சங்கர் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ. ராஜா (சங்கரன்கோவில்) மரு. சதன் திருமலைக் குமார் (வாசுதேவநல்லூர்), தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன், தலைமை பொறியாளர் சத்யபிரகாஷ் (நெடுஞ்சாலைகள்), சிறப்பு அலுவலர் சந்திரசேகரன் (தொழில் நுட்பம்), கண்காணிப்புப் பொறியாளர் ஜெயராணி, தென்காசி கோட்டப் பொறியாளர் சுரேஷ்பாபு, (நெடுஞ்சாலைகள்) தேசிய நெடுஞ்சாலைகள் கண்காணிப்பு பொறியாளர் சாந்தி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் பிரமாண்ட வரவேற்பு!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கோவை வருகை!

## மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் – தொ.அ.ரவி – தளபதி முருகேசன் வேண்டுகோள்!







கோவை, டிச. 17-

கோவைக்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் மாபெரும் மகத்தான பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப் படுகிறது என கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ. ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,

நாளை (18.12.2024-புதன்கிழமை) மதியம் 12.00 மணியளவில், சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தருகிறார்

அவருக்கு விமான நிலைய பகுதியில் மேட்டுப்பாளையம், சூலூர் சட்டமன்ற தொகுதி கழகத்தினர் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

மதியம் 12.15 மணியளவில் பீளமேடு ஹோப் காலேஜ் பகுதியில் சிங்காநல்லூர் தொகுதி, தெற்கு தொகுதி கழகத்தினர் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

மதியம் 2.30 மணி அளவில் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் (GCT) நடைபெற உள்ள, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்குகிறார்.

மதியம் 3 மணி அளவில் கோவை சத்தி சாலையில் ஆம்னி பேருந்து நிலையம் எதிரில் பெத்தேல் மாநகரப் பேராலயத்தில் நடைபெற வுள்ள பெந்தேகொஸ்தே சபைகளின் "கிறிஸ்மஸ் விழாவில் கலந்துக் கொள்கிறார்.

மாலை 3.30 மணி அளவில் கோவை வ.உ.சி. மைதானத்தில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் எம்.பி. அலுவலகத் திறப்பு விழாவில் பங்கேற்று அலுவலகத்தைத் திறந்து வைக்கிறார்.

மாலை 4 மணி அளவில் கோவை நவஇந்தியா அருகில் எஸ். என்.ஆர்.கலையரங்கத்தில் நடைபெறும், மாவட்ட அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், துணை மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகரக் கழக, ஒன்றியக் கழக, பகுதிக் கழக பேரூர்க் கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், பி.எல்.ஏ.2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு, ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 8 – இல் சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 17.12.2024 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | 8 | சிவகாசி | நாச்சியார் மஹால், சசி நகர், சித்துராஜபுரம், சிவகாசி. |
| | மாலை 4.00 மணி | | விருதுநகர் | வி.வி.வி.அரங்கம், அம்பாள் மண்டபம் பின்புறம், அருப்புக்கோட்டை சாலை, விருதுநகர். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### தொண்டர்கள் புடைசூழ

# அரசு மரியாதையுடன் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் தகனம்!



சென்னை, டிச.16

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதியின் எம்.எல்.ஏ.வுமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு (வயது 76) கடந்த மாதம் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து அவர் சென்னை மணப்பாக்கத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவருக்குத் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (14.12.2024)காலை 10.12 மணியளவில் காலமானார். இவரது மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் தங்களது இரங்கல்களைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து சென்னையில் நேற்று மாலை அவரது உடலுக்கு இறுதிச்சடங்குகள் நடைபெற்றன. இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோதிமணி, வசந்தகுமார் உள்ளிட்ட பலரும், கட்சி தொண்டர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் தி.மு.க. அமைச்சர்கள் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி தலைவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் மணப்பாக்கம் இல்லத்தில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் முகலிவாக்கம் மின் மயானத்தில் வைக்கப்பட்டு, போலீசார் மூன்று முறை வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு 48 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து இரங்கல் கூட்டம் நடத்தப்பட்ட பின் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் தகனம் செய்யப்பட்டது.

### பகுதிச் செயலாளர் ஆர்.கே.ஐயப்பன் தலைமையில்

# வேலூரில் துணை முதல்வர் பிறந்த நாள் - அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. – மேயர் சுஜாதா ஆனந்த குமார் சிறப்புரை!

வேலூர், டிச.17-

வேலூர் மாவட்டம் தொரப்பாடி பகுதி தி.மு.க. சார்பில் இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்கப் பிரச்சார பொதுக்கூட்டம் சித்தேரி பஞ்சாயத்து அலுவலகம் அருகில் நடந்தது.

கூட்டத்துக்கு தொரப்பாடி பகுதிக் கழகச் செயலாளர் ஆர்.கே.ஐயப்பன் தலைமை தாங்கினார் தொரப்பாடி பகுதி கழக அவை தலைவர் சி.ஆர்.ரவி அனைவரையும் வரவேற்று பேசினார்.

வட்டக் கழக செயலாளர்கள் குமரேசன், ஏ.எம். ஏழுமலை, கணேஷ் குமார், சுமித்ராபழனி, வீரமணி பார்த்தசாரதி, ஹரி, ஆறுமுகம், மோகனம் சீனிவாசன், ராஜா கனகராஜ், மயில் வாகனம், கார்த்தி, இ.தினேஷ் குமார், ஜி. ராஜேஷ் பிரசாந்த், செந்தில், யோகேஷ், விவேக் தண்டபாணி, ரவிக் குமார் ரேவதி பரமசிவம், இளங்கோவன் பொன்முடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ.,வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

இக்கூட்டத்தில் மண்டல குழுத் தலைவர் எஸ்.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.ஜி.ஆறுமுகம், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஜி.ரமேஷ், கணியம்பாடி ஒன்றியக் கழகச் செயலாளர் என்.கஜேந்திரன். எல்லாபுரம் பகுதிச் செயலாளர் சி.எம்.தங்கதுரை, சலான் பேட்டை பகுதி செயலாளர் வி.ஜி.கே. சுந்தரவிச்சி, சங்கரன்பாளையம் பகுதிச் செயலாளர் ஜி.பாலு, முரளி கிருஷ்ணா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ், பென்னாத்தூர் பேரூர் செயலாளர் அருள்நாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் வட்டக் கழகச் செயலாளர் எம். பக்தவச்சலம் நன்றி கூறினார்.



நெல்லையில் பெய்த தொடர் மழை காரணமாக நெல்லை டவுன் சந்திப்பிள்ளையார் கோவில் முன்பு மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் பொது மக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கினார். நிகழ்வில் நெல்லை பகுதிச் செயலாளர் நமச்சிவாயம், வட்டக் கழகச் செயலாளர் சுந்தர்ராஜன், பொருளாளர் பாஸ்கர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, சேக்பிள்ளை சத்யா, ஆறுமுகம், ஜாபர், சுகாதார மேற்பார்வையாளர், சிவக்குமார் ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவர் கீதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

திருவள்ளூர், டிச.17

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர் எழுச்சி நாள் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் நடுக்குத்தகை ஊராட்சியில் நடைபெற்றது.

இதில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஷ்வரன், அக்னி ராஜேஷ், பிரியா குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி, டி.தேசிங்கு, தி.வை.ரவி, மற்றும் யமுனா ரமேஷ், பொறியாளர் எம்.மோகன், ஆர்.லட்சுமி, பரமேஸ்வரி கந்தன், கு.தமிழ்செல்வம், நெமிலி சுரேஷ்குமார், என்.பி.மாரிமுத்து, ஜெ.சாக்ரடீஸ், எம்.குணசேகரன், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு விளையாட்டு அணிகளுக்கு கிரிக்கெட் கிட், கைப்பந்து கால் பந்து குத்துச்சண்டை கிட் பேக் மற்றும் 1000 பெண்களுக்கு சில்வர்குடம் வழங்கி சிறப்புரையாற்றினார்.



தேனி தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரகாஷ் ஏற்பாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட முத்தனம்பட்டியில் உள்ள அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் வழங்கினார். உடன் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன், ஒன்றிய மாணவர் அணி குமார் மற்றும் கழக முன்னோடிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.